# யாழ் போதனா வைத்தியசாலை மீண்டும் நாளை முதல் பழைய இடத்தில் இயங்கும்

## கிளினிக்குகள் திங்கள் முதல்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றதை யடுத்து கடந்த நான்கு மாதங்களாக மூடப்பட்ட யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை நாளை வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் பழைய இடத்தில் இயங்கும் என்று வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். நாளை காலை ஆறு மணி முதல் நோயாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். வெளிநோயாளர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். ஆரம்பத்தில் அவசர நோயாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேபோல உடனடியாக வெளி நோயாளர்பிரிவு, சத்திர சிகிச்சைப்பிரிவு என்பனவும் ஆரம்பிக்கப்படும். இதேவேளை வழமையான கிளினிக்குகள் யாவும் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கள் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது, (70, 74, ப11)


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 268 வியாழன் 08-11-1990 (ஐப்பசி 22) ந. ஆகிர் 19


★ பதினொரு மாத கால ஆயுள் கொண்ட

# பிரதமர் வி. பி. சிங்கின் அரசு நேற்று இரவு கவிழ்ந்தது

## ஆதரவாக - 142 வாக்குகள் எதிராக - 346 வாக்குகள்

இந்தியப் பிர்தமர் விஸ்வநாத் பிரதாப் சிங் கொண்டுவந்த நம்பிக்கைப் பிரேரணை நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் பதினொரு மணிநேர பரபரப்பான விவாதத்தின் பின்னர் எதிர்பார்த்த படியே தோல்வி கண்டது.

பாராளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் நேற்றுக்காலை 11மணிக்கு ஆரம்பமாகி இரவு பத்துமணிவரை நீடித்தது.

5.29 உறுப்பினர்களைக் கொண்ட லோக்சபாவின் இக்கூட்டத்தில் 496 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்,

பிரதமர் வி. பி. சிங்கிற்கு ஆதரவாக 142 பேரும் எதிராக 346 பேரும் வாக்களித்தனர். எட்டு உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்தனர்.

இந்திராகாங்கிரஸ்,பாரதிய ஜனதா, ஜனதாதளத்தின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் மாவீரர் தினம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் தினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்

—04 ஆம் பக்கம் பார்க்க

யாழ் பல்கலைக்கழகத்திற்கு

## கிழக்கு மாகாண மாணவரை இங்கு கொண்டுவர ஏற்பாடு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களை பாதுகாப்பாக இங்கு அனுப்பி வைக்க யாழ் அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

கொழும்பிலுள்ள யாழ் அரசாங்க அதிபர்இங்குள்ள நிலைமைகள்குறித்து யாழ்மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன், ஐக்கியநாடுகள் அபிவிருத்தி ஸ்தாபன யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயற்திட்ட இணைப்பாளர் திரு கே. சற்குணலிங்கம் ஆகியோருடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட போது இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்

—04 ஆம் பக்கம் பார்க்க

யாழ் மாவட்டத்திற்கான மின் இணைப்பு

## திருத்த வேலைகளை அனுராதபுர பிரிவே மேற்கொள்ளும்

யாழ் மாவட்டத்திற்குக் கிடைக்கும் ர் மின்சாரம் தடைப்பட்டதிற்குக் காரணம் யாழ் மாவட்டத்திற்கு அனுராதபுர மாவட்டத்தில் உள்ள களுத்தாறு என்னும் இடத்திலிருந்து வரும் 132 K.V. மின் கேபிள் அறுந்துவிட்டதே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரத்தில் இருந்து வவுனியா வரும் 33 K.V. யும் துண்டிக்கப்பட்டு விட்டதாகவும் தெரியவருகிறது.

அனுராதபுர பொறியியல்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பிரேரணை தோல்வி குறித்து இவர்கள் கருத்து....

நேற்றைய நம்பிக்கைத் தீர்மானம் தோல்வியடைந்தது குறித்து கருத்து வெளியிட்ட வி. பி சிங் ''இது எனது கொள்கைக்குக் கிடைத்த வெற்றி'' எனக் குறிப்பிட்டார்.

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி ''லோக் சபா சரியான ஓர் தீர்ப்பு அளித்துள்ளது'' என்றார்.

'' ஓர் அத்தியாயம் முடிந்துவிட்டது'' என அடுத்த பிரதமராக வரக்கூடிய வாய்ப்புடைய சந்திரசேகர் குறிப்பிட்டார்.

## முல்லைத்தீவுக் கடற் பகுதியில் மர்மக் கப்பலின் நடமாட்டமாம்

முல்லைத்தீவுக் கடலில் அடையாளம் தெரியாத கப்பல் ஒன்றின் நடமாட்டம் காணப்படுவதாக நேற்றுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. இக்கப்பலில் இருந்து சிறிய படகுகள் கடந்த வாரம் முல்லைத்தீவுக் கரைக்கு வந்துசென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு கல்லடிப்பகுதியில் ராணுவத்தினரை ஏற்றிச் சென்ற வாகனம் மீது புலிகள் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் சாரதி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## சேதமான பகுதிகளை செஞ்சிலுவைக்குழு பார்வையிட்டது

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவினர் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்த பகுதிகளையும், திருத்த வேலைகள் நடைபெறும் பகுதிகளையும் பார்வையிட்டனர்.

இதேவேளை யாழ் போதனா வைத்தியசாலை நாளை முதல் இயங்கவுள்ளதால் செஞ்சிலுவைச்சங்க,போதனா வைத்திசாலைத் தொண்டர்கள் அனைவரும் உடனடியாக வைத்தியசாலைக்கு சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (70, 74)

## தெல்லிப்பழையில் நேற்று ஹெலிகப்டர் தாக்குதல்

நேற்றுக்காலை 8 15 முதல் சுமார் 2 மணிநேரம் தெல்லிப்பழை, அம்பனை, கொல்லங்கலட்டி மாவிட்டபுரம் பகுதிகளில் ஹெலி தாக்குதல் நடாத்தியது.

இத்தாக்குதலின் போது கலிபர் ரொக்கட் என்பன பயன்படுத்தப்பட்டன. இடைக்கிடை கிரனைட்டும் வீசப்பட்டது. இதனால் ஒருவர் படுகாயமடைந்தார்.

பலாலியிலிருந்து ஷெல் தாக்குதலும் நடாத்தப்பட்டன. (48, ப 10)

## பதவியைக் காப்பதற்கு தமிழருக்கு எதிராகத் தமிழர்

வன்னிப் பகுதியைச் சேர்ந்த ஒரு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளராக இருந்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் தனது பதவி நீடிப்புக்காக கொழும்பில் உள்ள தலைமை அலுவலகம் சென்றார். பதவி நீடிப்புப் பெறுவதற்காக தலைமை அலுவலகத்தின் கட்டளைப் படி திருகோணமலை செல்வதற்கும் ஒப்புக்கொண்ட அவர், — 04 ஆம் பக்கம் பார்க்க

## 4ஆம் கட்ட நிவாரணப் பங்கீடு விநியோகத்துக்கு உணவுப் பொருட்களை தருவிக்க நடவடிக்கை

நாலாம் கட்ட நிவாரணம் வழங்குவதற்கு போதியளவு உணவுப்பொருட்கள் கொழும்பிலிருந்து வந்து சேர வேண்டும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் மாவட்டத்திற்கு அரசாங்கம் அறிவித்தபடி பத்துக் கட்ட நிவாரண உலர் உணவுப்பொருட்களை வழங்க 60 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப்பொருட்கள் தேவைப் படுகின்றன.

இதில் இரண்டு கட்டம் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. ஆனால் நாலாம் கட்டம் வழங்குவதற்கு 5000 மெற்றிக் தொன் உணவுப் பொருள் கிடைக்கவேண்டும்.

இவற்றை உடனடியாகப் பாரிய கப்பல்களில் காங்கேசன்துறை துறை முகத்துக்கு அனுப்பி வைக்க கொழும்பில் உள்ள யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நடவடிக்கை எடுத்துள்ளார். (66)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# தவிர்த்திருக்கக்கூடிய மரணம்

ஆசிரியர்,
முரசொலி.

என் மனைவிக்கு இது தலைப்பிரசவம். தாயாகவும் தந்தையாகவும் போகிறோம், என்ற கனவுகளில் மாதங்கள் உருண்டன.

பிரசவம் சுகமாக நடைபெறவேண்டும் என்ற அக்கறையில், தனியார் மருத்துவமனையொன்றில், பிரபலமான மகப்பேற்று நிபுணரிடம் காட்டி மாதாந்த பரிசோதனை செய்து வந்தோம்.

உத்தேச மகப்பேற்றுத் திகதி 20-10-90. 10-10-90. இல் நடந்த பரிசோதனையின் போது சிறுநீரில் வெள்ளைக்கரு அதிகரித்திருப்பதும், குருதி அமுக்கம் அதிகரித்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. பிள்ளை தானாகப் பிறக்கும் அறிகுறி இல்லாததால் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என நிபுணர் கூறினார்.

தனியார் மருத்துவமனையில் வசதிகள் போதாதபடியால், மானிப்பாய் போதனா வைத்தியசாலைக்கு அதிகாலை 4.30 அளவில் கர்ப்பிணியைக் கொண்டு போகும்படியும், தான் காலை 6 மணிக்கு அறுவைச் சிகிச்சை செய்வதாகவும் அவர் சொன்னார்.

காலை 5 மணிக்கு வருவதாகச் சொன்ன நிபுணர் 8 மணியாகியும் வரவில்லை. அவரைத்தேடி வீட்டுக்கும் தனியார் மருத்துவமனைக்கும் அலைந்தோம். ஒருவாறு 9 மணிக்கு மானிப்பாய் வந்து சேர்ந்தார்.

காலை 6 மணிக்கு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டிய கர்ப்பிணி காத்திருப்பதாகச் சொன்னபோது. 'ஓம்,எனக்குத் தெரியும்''! என்று கூறிவிட்டு சக டாக்டர்களோடு கதைத்துக்கொண்டு நின்றார்.

ஈற்றில் 12 மணியளவில் சத்திரசிகிச்சை நடைபெற்றது. குழந்தை இறந்துவிட்டது; தாய் உயிர்பிழைத்தாள்.

கவலையோடு, ஒரு மரத்தடியில் இருந்த என்னிடம் நிபுணர் வந்து, குழந்தை 8—9 மணியளவில் இறந்திருக்கலாம் என்று தெரிவித்தார்.

மறுநாள், வார்டுக்குப் போய், தாயிடம், ''இப்படி, குழந்தை இறக்கும் என்று தெரிந்திருந்தால், முதல்நாளே ஒப்பிறேஷன் செய்திருப்பேன்'' என்று ஆறுதல் கூறினாராம்

எமக்கு நடந்த இந்த அவலம், ஏனையோருக்கு நடக்கக் கூடாது என்ற நோக்கத்தில் இதை எழுதுகிறேன்; பிரசுரிப்பீர்களா?

திருநெல்வேலி. க. இராஜேந்திரன்.

## திருட்டு அதிகரிப்பு

கேரதீவு - சங்குப்பிட்டிப் பகுதியில் சன நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் இச்சந்தர்ப்பத்தைப் பாவித்து சயிக்கிள் திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்து வருகிறது.

இதேபோன்று சயிக்கிள் பூட்டப்பட்ட நிலையில் இருந்தபோது அதன் உதிரிப்பாகங்களான சீற், மூன் சில்லு என்பன கழற்றிச் செல்லப்பட்ட சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன. (71)

## மண்டைதீவில் மலத்தியோன் தெளிக்கப்படுகிறது

மலேரியா தடை இயக்கத்தினர் மண்டைதீவுப் பகுதியில் மலத்தியோன் மருந்து தெளிக்கும் வேலைகளை பொது மக்களின் உதவியுடன் ஆரம்பித்துள்ளனர்.

மண்டைதீவுப் பகுதியில், அண்மைக் காலங்களில் நுளம்பு, இலையான் போன்றவற்றின் தொல்லைகள் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இடம்பெயர்ந்த கிழக்கு ஊழியர் கூட்டம்

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த ஊழியர் சங்கம் கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த அரசாங்க் கூட்டுத்தாபன மற்றும் தனியார் துறை ஊழியர்களை 15-ம் திகதி வியாழன் காலை 8 மணிக்கு யாழ் நல்லூர் சாதனா பாடசாலையில் அரசாங்க அதிபருக்கு மனு சமர்ப்பிக்கும் நோக்கோடு சமுகம் தருமாறு கேட்டுள்ளது.

## மாவீரர் நினைவாக

தீவுப்பகுதியில் மாவீரர் தினத்தை பெருவிழாவாக நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் வேலணையில் பொதுச்சந்தையொன்று திறந்து வைப்பது, வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர் சூட்டுவது, மாவீரர்களுக்கான சிலை நிறுவுவது போன்ற பல வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. (24)

## 2-வது பிறந்தநாள் வாழ்த்து

### ★ செல்வன் கோ. ரகுவரன் ★

கந்தரோடையைச் சேர்ந்த கோபாலசர்மா-பவானி தம்பதியின் புத்திரன் ரகுவரன் தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகின்றார். நீர்வை அரசகேசரிப்பிள்ளையார் அருளால் கல்வி கேள்விகளில் சிறந்து பல்லாண்டுகாலம் ரகுவரன் வாழ்க என்று அப்பா, அம்மா, ஹம்சாஅக்கா, சித்தி, மாமாமார், சித்தப்பாமார், தத்தா, அம்மம்மா மற்றும் உறவினர்கள் வாழ்த்துகின்றார்கள்.

11043

செப்ரெம்பர் முதல் டிசம்பர் வரையிலான

# மேலதிக ஆபத்து அலவுன்ஸ் வடபகுதி ஊழியருக்கு கிடையாது!

அரசாங்க ஊழியர்களுக்கான மேலதிக ஆபத்து அலவுன்ஸ் வடக்கைச் சேர்ந்த ஊழியர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆபத்து அலவுன்ஸ் இவ்வருடம் ஜூன் 11-ம் திகதியிலிருந்து மூன்று மாதகாலத்திற்கு வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சகல அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த அலவுன்ஸ் இவ்வருடம் டிசம்பர் 31-ம் திகதி வரை மொத்தம் ஏழு மாதங்களுக்கு வழங்கப்படுமென தற்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் சிவில் நிர்வாகம் மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ள பகுதிகளில் கடமையாற்ற வரவேண்டுமென அறிவிக்கப்பட்ட ஊழியர்களுக்கு மட்டுமே இந்த மேலதிக அலவுன்ஸ் வழங்கப்படுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் வடமாகாணத்தைச் சேர்ந்த பல மாவட்ட அரச ஊழியர்களுக்கு மூன்று மாதகால ஆபத்து அலவுன்சை மட்டுமே பெற்றுக்கொள்ளக் கூடிய வர்ய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன் மேலதிக நான்குமாதங்களுக்குரிய படி இவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

## முறைசாராக் கூட்டங்கள்

முறைசாராக் கல்விப் போதனாசிரியர்களுக்கான கூட்டம் 9ஆம் திகதி காலை 9 00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று தொழில் நுட்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கான கூட்டம் 9ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கல்வித்திணைக்களத்தில் நடைபெறும்.

இதேவேளை கடந்த மூன்று ஆண்டுகளில் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் தொழிற் திறன் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கான கூட்டம் 11ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அவரவர் கற்ற பாடசாலைகளில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் வழங்குவது பற்றி ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

## குகமூர்த்தியை விடுவிக்கக் கோரிக்கை

கொழும்பில் ஆயுதபாணிகளினால் கடத்தப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை ஊழியர் கு. குகமூர்த்தியை விடுதலை செய்யுமாறு உலகம் முழுவதும் இயங்கும் மனித உரிமைக் குழுக்களும், இலங்கையின் பல முற்போக்கு அமைப்புக்களும், இலங்கை அரசைக் கோரியுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குகமூர்த்தி இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தேசியக்குழு உறுப்பினரும், மனித உரிமைகள் வாதியுமாவார்.

ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திலிருந்து வெள்ளவத்தையிலுள்ள தனது இருப்பிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

## சிறு விளம்பரம்

### சேவை

தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். ''ஸ்கைலைன்ஸ்'' 281B, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். ''Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை). 11025

மீண்டும் றோணியோர், தமிழ், ஆங்கில தட்டச்சு சகல அச்சுவேலைகளும் நவீன முறையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் 138, நாவலர் றோட்(மனோஹராசந்தி) யாழ்ப்பாணம். 11032

## உணவு உற்பத்தி முக்கியம்

தீவுப்பகுதியில் விவசாயம், மற்றும் பணப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருவோர் ஐம்பது வீதம் உப உணவு உற்பத்தி செய்தால் தான், ஐம்பது வீதம் பணப்பயிர்ச் உற்பத்தி செய்யலாமென விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் விவசாயப் பிரிவும் கிராமிய உற்பத்திக் குழுக்களும் துண்டுப்பிரசுரங்கள மூலம் விவசாயிகளை கேட்டுள்ளன. (24)

புத்தம் புது டிசைன்களில்
வெளிநாட்டு

### நத்தார், புது வருட வாழ்த்து மடல்கள்!

பல தினிசுகளில், பல அளவுகளில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

கிடைக்கும் இடங்கள்:

'ரஞ்சிற்'
16, கொன்வென்ற் லேன், யாழ்ப்பாணம்.

ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
( அம்மன் கோவில் அருகில் )

11047

## 31-ம் நாள் நினைவஞ்சலி

படைப்பு: 22 | 01 | 1953



அழிப்பு: 09 | 10 | 1990

### ஆறுமுகம் கெங்கைவேந்தன்

(தவம்)
(வைத்தியசாலை ஊழியர், சாவகச்சேரி)

அன்புக்குரியவரே ஆருயிர் நாயகனே
அரவணைப்பில் நாமிருந்தோம் ஆறாத்துயராச்சே
விளக்கேற்றி வைத்தீரே விளக்கணைந்து நாளாச்சே
வீட்டில் உள்ளோர் கதறியழ விண்ணுலகம் போனீரே

நோயாளர் பிணிபோக்க பணிவோடு நின்றீரே
உன்குறை போக்கஇனி யாரெமக்கு பாரினிலே
உம்மை நினைக்கையிலே எம்இதயம் வெடிக்குதையோ
நொடிப்பொழுதும் அகலாது உம் நினைவு எம்மைவிட்டு

விட்டகலா நினைவுடனே

மனைவி,பிள்ளைகள், அம்மா, ஐயா,
அன்ரி, மாமா, சித்தி, சித்தப்பா,சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார்.

பிரிவால் வாடும்:

வைத்தியசாலை ஊழியர்கள்,
சாவகச்சேரி. 11046

## துணைவேந்தர் துரைராஜா:

# "கல்வியே தலையாயதெனும் உணர்வு வலுவுற வேண்டும்"

"போர்க் காலங்களில் நிகழும் இடர்களையும் பொருட்படுத்தாது மாணவர்கள் கல்வியில் மிகுந்த கரிசனை கொள்ளல் வேண்டும். தமிழரின் சொத்து புனிதமான கல்வியே என்ற பேருண்மை மாணவர் இதயத்தில் உறுதி பெறவேண்டும்" என்று யாழ் பல்கலைக் கழகத்தில் கடந்த திங்கள் நடைபெற்ற புதிய கல்வியாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சியில் உரை நிகழ்த்துகையில் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மின்சாரம் முதலான வசதிகளை எதிர்பாராது. கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்வதிலேயே சிந்தை லயிக்க வேண்டும். பல்கலைக் கழக ஒழுக்க நெறிகளைப் பேணி ல்கலைக் கழகத்தின் நற்பெயரைக் காக்க வேண்டும்" என்றார்.

"மின்சாரம், மற்றும் போக்குவரத்து வசதிகளுக்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மூலமாக உதவிகள் கோரப்பட்டுள்ளன" என்ற தகவலையும் துணைவேந்தர் வெளியிட்டார்.

பாதுகாப்புக் காரணங்கள் பற்றியும் ஆணையாளர் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் அர்ச்சுனா அலுவிகாரையின் கவனமும் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ப-12, 70)

## துரிசு பூட்டப்படாததினால்

# கிளிநொச்சிக் குள நீர் வீணாகக் கடலுக்குள் பாய்கிறது

கிளிநொச்சியில் ராணுவ நடவடிக்கையின் போது உடைக்கப்பட்ட கிளிநொச்சிக் குளம் தற்போது ஓரளவு கட்டப்பட்டு துரிசு திறக்கப்பட்டுள்ளதால் தண்ணீர் வீண்விரையமாகிவருகிறது.

குளத்தின் துரிசைப் பூட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்தால் வரட்சியின்போது வற்றிய இப்பகுதிக் கிணறுகளில் தண்ணீர் ஊற வாய்ப்புண்டு என்றும் ஆலோசனை தெரிவிக்கப்படுகின்றது.

துரிசு மூடப்படாததினால் மழையினால் ஓடிவரும் தண்ணீர் யாவும் வீணாகக் கடலிற்குச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (35)

## 'புழுதிபடியும் திருச்சபை'

# அந்தோனியார் ஆலயத்தில் தமிழ் கல்வெட்டுக்கள் மறைவு

சர்ச்சைக்குரிய கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு ஒன்று மர்மமான முறையில் காணாமல் போய்விட்டதாக அப்பங்கைச் சேர்ந்த தமிழ்க் கத்தோலிக்க மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாலய பங்குக்குருவாக புதிதாக நியமிக்கப்பட்ட அருட்திரு சைற்றஸ் குருகுல சூரிய என்ற சிங்கள குருவானவர் இறையியல் ஆராய்ச்சி என்ற பெயரில் அவ் ஆலய உருவாக்கம், வரலாற்றில் தமிழர்களின் பங்களிப்பை நிரூபிக்கக் கூடிய முக்கிய சான்றுகளை அகற்றி வருவதாகவும் தமிழ்க் கததோலிக்கர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கொச்சிக்கடை 'புனித அந்தோனியார் ஆலய பங்குக் குருவாக அருட்திரு. சைற்றஸ் குருகுலசூரிய நியமிக்கப்பட்டதன் பின்னர் அங்கு தமிழ் ஆராதனை நேரங்கள் குறைக்கப்பட்டதாகவும், ஆலயத்தில் தமிழர்களுக்கெதிரான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு கொழும்பு பேராயரும் உடந்தையாக இருந்து வருவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று 'புழுதிபடியும் திருச்சபை' என்ற பெயரில் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உணவுமுத்திரையின் 5-ம் புள்ளிக்கு பொருட்களை வழங்கப் பணிப்பு

5-வது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரையின் 5-வது புள்ளிக்கான உணவுப் பொருட்களை மட்டும் வழங்க வேண்டுமென்று யாழ்-சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ் - மாவட்டத்தின் 14 உதவி அரச அதிபர்களுக்கும் சமூக சேவைப்பகுதியால் அனுப்பப்பட்ட கடிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேற்படி 5வது புள்ளிக்கான உணவு விநியோகத்தை மேற்கொள்வதோடு அவற்றிற்கான உறுதிச் சீட்டுக்களை இம்மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் யாழ். செயலக சமூக சேவைப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளது.

உலர் நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருவதனாலும், ஏற்கனவே ஒரு சில ப நோ கூ. சங்கங்கள 5-வது புள்ளிக்கு உணவுப் பொருட்கள் வழங்கியமையாலுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களுக்குரிய 6-ம், 7-ம் புள்ளிகளுக்குரிய உணவுப் பொருட்கள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. (47)

## மட்டக்களப்பில் இருவர் சுட்டுக்கொலை

கிழக்கிலங்கையில் வைத்து லொறி உரிமையாளரும் சாரதியும் சுட்டுக்கொலைசெய்யப் பட்டுள்ளனர்.

இச் சம்பவம் மட்டக்களப்பில் நடந்துள்ளது. லொறியின் கிளீனரைக் காணவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி இருவரது சடலங்களும் மட்டக்களப்பிற்கு இரண்டு மைல் தொலைவில் வாகனேரியில் லொறியுடன் மீட்கப்பட்டன. (11)

தொடர் — 08

# 'முற்றுப் பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்'

மண்டைதீவைச் சேர்ந்த 1,100 குடும்பங்களும் அல்லற்பட்டன. ஒருவிதமாக அல்லைப்பிட்டி பரவைக் கடலைக் கடந்து குழந்தைகள், பிள்ளைகள், பெண்கள், ஆண்கள் எனத் துணிந்தவர்கள் வேலணைத் தீவிற்குள் புகுந்தனர். மண்கும்பானில் அடைக்கலம் புகுந்தனர். நோயாளர், வயோதிபர், இடம்பெயர விரும்பாதவர்கள், சொத்து. சுகங்களை இழக்க விரும்பாதவர்கள் மண்டைதீவில் தங்கி, இராணுவத்தினரின் துப்பாக்கிகளுக்கு இரையாகினர். மண்டைதீவிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, பாபா பள்ளிவாசல், பெரிய பள்ளிவாசல், சாட்டி மாதா கோயில் என்பனவற்றில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

### சங்காரம்

மண்டைதீவுக்குள் பிரவேசித்த இராணுவத்தினர் மண்டைதீவுப் பிள்ளையார் கோவிலில் தஞ்சம் புகுந்திருந்த மக்களில் 6 ஆயிரம் மக்களை வரிசையாக நிற்க வைத்தனர். ஏசினர், சிலரைத் தாக்கினர், 50 ஆண்களைக் கைது செய்து அழைத்துச் சென்றனர், மண்டைதீவிலுள்ள பல வீடுகள் தகர்க்கப்பட்டன. குடிசைகள் அனைத்தும் எரியூட்டப்பட்டன. வீடுகளிலிருந்து பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. வாகனங்கள் எரிக்கப்பட்டன, மோட்டார் சயிக்கிள்கள் களவாடப்பட்டன. பங்கர்களுக்குள் இருந்த பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மண்டைதீவில் ஏறத்தாழ 50 பொது மக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட அடையாளம் காணப்பட்ட சடலங்கள். அல்லைப்பிட்டிப்பகுதியில் 20 பேர் வரையில் கொல்லப்பட்டனர். மண்டைதீவின் தெற்குப்பகுதி வீடுகள் அதிகம் எரிக்கப்பட்டன. வேலிகள், மதில்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டன. எரிக்கப்பட்டன. அல்லைப்பிட்டி மகாவித்தியாலயப் பிரதேசம் புல்டோசரினால் இடித்துத் தகர்க்கப்பட்டது. மண்டைதீவு கத்தோலிக்க தேவாலயப்பகுதி, அதனைச்சுற்றியிருந்த வீடுகள் கட்டிடங்கள் என்பன விமானக் குண்டு வீச்சினால் நிர்மூலமாக்கப்பட்டன.

### சென்றியில் பட்டுக்குடை

26 ஆந் திகதி மண்டைதீவ் சித்திவினாயகர் கோயில் கொடியேற்றம் நிகழவிருந்தது. இராணுவம் வந்ததால் திருவிழா நடைபெறவில்லை. இராணுவ ஆக்கிரமிப்பால் அங்கு சங்காரம் நிகழ்ந்தது கோயிலின் குடையை இராணுவத்தினர் சென்றி நிழலாகப் பாவித்தனர். செத்துப்போன ஆடு, மாடுகளை திருமஞ்சனக் கிணற்றில் தூக்கிப் போட்டிருந்தனர். கோயில் தேர்த் திருப்பணி மரங்கள் எரிக்கப்பட்டன திருவிழாவிற்காக வாங்கிய பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயம் விமானத்தாக்குதலால் பலத்த சேதமடைந்திருந்தது. நற்கருணை நாதர் பெட்டிஉடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

### முகாம்களில் 3,000 படைவீரர்

அல்லைப்பிட்டி அலுமினியத் தொழிற்சாலைச் சுற்றாடலில் ஸ்ரீலங்கா இராணுவம் பலமான முகாம் ஒன்றினை அமைத்திருந்தது பனைமரங்கள், மின்சாரக் கம்பங்கள் என்பன தறிக்கப்பட்டு உயரமான சென்றிகள் அமைக்கப்பட்டன. அன்று மாலையே அவ்விடத்தில் ஹெலி வந்திறங்கக் கூடியளவிற்கு முகாம் விஸ்தரிக்கப்பட்டது அல்லைப்பிட்டிக் கிராமத்தின் எல்லைவரை ஆதாவது செட்டிக்காவரை இராணுவ சென்றிகள் அமைக்கப்பட்டன. மண்டைதீவு மகா வித்தியாலயமும், றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் இராணுவ முகாம்களாகப் பாவிக்கப்பட்டன. மகாவித்தியாலயம் பிரதான முகாமாகவிருந்தது. அவ்வித்தியாசாலையின் முன்னுள்ள பனங்கூடலிலிருந்த அத்தனை பனை மரங்களும் தறிக்கப்பட்டு சென்றிகள் இடப்பட்டன. புல்டோசர்களினால் முன் காணிகள் மட்டமாக்கப்பட்டன. அதனால் இந்த முகாமிலிருந்து கோட்டையைப் பார்க்க முடிந்தது. 3000 இராணுவத்தினர் வரையில் இங்கு தங்கியிருந்தனர் எனக்கூறப்படுகின்றது.

### 44 புலிகள் களப்பலி

மண்டைதீவில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் பயங்கரமான நேரடி மோதல் நிகழ்ந்தது. இம் மோதலில் 44 போராளிகள் களப்பலியாகினர். முகாம் சுற்றாடலில் வாழ்ந்த பொதுமக்கள் பலர் காணமல் போயினர். பத்துப்பேரின் சடலங்கள் வீதிகளிற் காணப்பட்டன.

### கிணற்றில் சடலங்கள்

ஒரு கிணற்றில் சுட்டுக்கொல்லப்பட்ட 43 பேரின் சடலங்கள் இடப்பட்டு அவற்றின் மேல் எரு, வண்டிலோடு கவிழ்த்து விடப்பட்டது. வீடுகள் இடிக்கப்பட்டன. ஒரு வீட்டில் தாய், சிறிய தாய், ஒரு மகள் ஆதியோர் இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனால் மனமுடைந்த தந்தையும் இன்னொரு மகளும் நஞ்சருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டனர். வீடுகளில் இருந்த சேலைகள் அனைத்தும் கிழிக்கப்பட்டன. படுக்கைகளாகப் பாவிக்கப்பட்டன. நெல்மூடைகள் கிழிக்கப்பட்டு சிந்தப்பட்டிருந்தன. புத்தகங்கள் பரவலாக வீசப்பட்டிருந்தன. வீடுகளில் தொங்கிய பெண்பிள்ளைகளின் படங்களில் குங்குமத்தால் திலகம் இடப்பட்டிருந்தது. பராசக்தி வித்தியாசாலை இருந்தவிடம் தெரியாமல் புல்டோசரால் தகர்த்து நீக்கப்பட்டது.

### மூன்று நாள்களில் 60 பேர் கொலை

ஊர்காவற்றுறை, நாரந்தனை, புளியங்கூடல், பள்ளம்புலம், வேலணை ஆகிய இடங்களில் முதல் மூன்று நாட்களில் மாத்திரம் 60 க்கு மேற்பட்டோர் இராணுவத்தின் நடவடிக்கைகளால் கொலையுண்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட மக்களின் சடலங்கள் ஆங்காங்கு காணப்பட்டன. சில வைக்கோலிட்டு எரிக்கப்பட்டிருந்தன. பலர் வெட்டுக்காயங்களுக்குள்ளாகினர். வேலணை மேற்கில்

## 'அரவிந்தன்'

செ. செவ்வந்திநாதன், அவரது மனைவி சொருபா, மகன் அம்பிகாபதி ஆகியோர் பொம்மர் தாக்குதலினால் மரணமானார்கள். நாரந்தனையில் செ. பாலன், எஸ். மணவன், பே. சிவகுமார், பி அன்ரனி ஆகியோர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இப்பகுதியில் மா. வசந்தகுமார், ச. அமுதலிங்கம், எஸ். கிருஸ்ணபிள்ளை ஆகியோரும் கொலையுண்டவர்களாவர். காரைநகரில் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒரு வயோதிபர் ஆறு நாட்களின் பின்னர் மீட்கப்பட்டார்.

இராணுவ அதிகாரிகள் பொதுமக்களிடம், "நாம் கடலைக்காக சண்டி, நுவரெலியா முதலான பகுதிகளுக்குச் சென்றிருக்கிறோம். அங்கெல்லாம் பழங்களைப்பறித்து உண்போம். இங்கே என்ன இருக்கிறது? இந்த வனாந்தரபூமியிலுள்ள இந்த வறண்ட மண்ணிற்காகவா சண்டை பிடிக்கிறீர்கள்?" எனப்பொதுமக்களை நோக்கிக்கேட்டனர். தாகத்திற்கு பிடிக்கப்பட்டிருந்தவர்கள் தண்ணீர் கேட்டபோது, பிளாக் அன்ட் வயிற் விஸ்கிப்போத்தல் மூடியில் வழங்கிச் சிரித்தனர். கடலைக்காட்டி அங்கிருக்கும் நீரை அருந்துங்கள் எனவும் கூறப்பட்டது. ஓப்பறேசன் போர்ட் என்ற இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஜெனரல் கொப்பேகடுவ தலைமை தாங்கினார்.

### கோட்டையை நோக்கி ...

இவற்றிற்கு மத்தியில் மண்டைதீவில் நிலைகொண்ட இராணுவம் யாழ் கோட்டையை நோக்கி நகர்வதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தது. அந்த நாள் -

### 13 செப்டம்பர் 1990

விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு பின்வருமாறு அந்த நிகழ்ச்சியை அச்சொட்டாக விபரிக்கின்றது:

### குண்டு வீச்சு

"...மண்டைதீவில் இருந்தபடியே கோட்டையைப் பிடிக்க இராணுவம் திட்டம் தீட்டியது. 300 கிலோ எடைகொண்ட பீப்பாக் குண்டுகளையும் 50 கிலோ கொண்ட விமானக் குண்டுகளையும் வீசி யாழ். நகரப் பகுதிகளில் இருந்த கட்டிடங்கள் அனைத்தையுமே அழிக்க முயன்று கொண்டிருந்தது. இத்துடன் நேபாம் குண்டுகளையும், நச்சுக் கிருமிகளைப் பரப்பும் குண்டுகளையும், இரசாயனக் குண்டுகளையும் வீசியது.

(வளரும்)

பாராளுமன்றத்தில் நேற்றுப் பிரதமர் வி. பி. சிங்கின் உரை:

# 'இழுவைப்பெட்டி ஜீப்பை இழுக்கிறது இதுவே இன்றைய இந்திய அரசியல்'

சந்திரசேகர் ஓர் இழுவைப்பெட்டி இந்திரா காங்கிரஸ் கட்சியோ ஒரு ஜீப் வண்டி. ஜீப் வண்டி இழுவைப்பெட்டியை இழுத்துச் செல்லலாம் ஆனால் இங்கோ (இந்தியாவில்) இழுவைப்பெட்டிதான் ஜீப் வண்டியை இழுக்கப்போகிறது.

இவ்வாறு பிரதமர் வி. பி. சிங் நேற்றுத்தமது அரசு மீதான நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பின் முன்னதாக ஒரு மணிநேரப் பேச்சின் போது குறிப்பிட்டார்.

எந்தக்கட்சி இந்த அரசை வீழ்த்துகின்றதோ அவையே அமைச்சரவையை அமைக்க முன்வரவேண்டும். உதிரிக்கட்சியை அமைச்சரவை அமைக்குமாறு அழைத்தால் அரசியல் நாகரிகமே கெட்டுவிடும்.

தேசிய அரசு அமைய ஜனதாதளம் ஒத்துழைக்கும். ஆனால் அதில் பாரதீய ஜனதா இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது.

பதவியா அல்லது சட்ட மரபா என்ற போராட்டத்தில் நான் சட்ட மரபைப் பேணவே உறுதிபூண்டேன். ரத யாத்திரையை நிறுத்தும்போதே எனது கட்சியின் தலைவிதியை நிர்ணயித்து விட்டேன்.

மதசார்பின்மை, சட்டம் என்பன இந்நாட்டில் நிலை நிறுத்தப்படுமா என்பதை ஆராயவே இந்த நம்பிக்கைத் தீர்மானம். இதிலிருந்து யார் யார் எந்தப்பக்கம் என்பது தெரிந்துவிடும். உறுப்பினர் நாட்டைமனதில் கொண்டு மனச்சாட்சிப்படி வாக்களிக்க வேண்டும்.

காங்கிரஸ் அரசை வழி நடத்த முன்வராது மறைந்து நிற்கிறது என்று தனது உரையில் வி.பி.சிங் குறிப்பிட்டார்.

விவாதத்தில் கலந்து கொண்ட சந்திரசேகர் உரையாற்றுகையில்:- வி. பி. சிங் ஒரு சந்தர்ப்பவாதி என்றும் அதிகாரத்தில் தொங்கிக் கொண்டு இருக்கிறார் என்றும் குற்றஞ்சாட்டினார். அவர் தம் தத்துவங்களுக்கு ஒருகாலமும் செயல்வடிவம் தந்தவரல்ல! என்றார்.

ராஜீவ் காந்தி:- சொல் ஒன்று செயல் ஒன்றாய் நடப்பவர் பிரதமர். அவர் நடவடிக்கைகள் நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டன என்றார்.

அத்வானி பேசுகையில்:- எல்லா முனைகளிலும் இந்த அரசு தோற்றுவிட்டது. ராமபிரான் பிறந்த இடத்தை நீதிமன்றம் தீர்மானிக்க முடியாது! என்றார் காரசாரமாக தொடர்ந்துபேசிய,

சந்திரசேகர்: பஞ்சாப் தேர்தலைப் பின்போட, இந்த அரசு இந்திரா காங்கிரஸ் உடன் ஒத்துழைக்க முடியுமானால், நாம் ஒத்துழைபதில் என்ன தவறு? எனக்கேள்வி எழுப்பினார். இப்போதைய சம்பவங்கள் 1979ஐ நினைவூட்டுகின்றன, இந்திராகாங்கிரஸ் உடன் செய்யப்படும் கூட்டு மக்கள் ஆணைக்கு மாறானது என்றார் மது தண்டவதே.


## காவலூர் வங்கி

## ஸ்ரான்லி வீதிக்கு மாற்ற முயற்சி

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக பாதிப்படைந்த, இலங்கை வங்கியின் ஊர்காவற்துறைக் காரியாலயத்தைத் தற்காலிகமாக ஸ்ரான்லி வீதியில் உள்ள இலங்கை வங்கிக்கிளையின் ஒரு பகுதிக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன.

திட்டமிட்டபடி யாவும் எந்தவித இடையூறும் இன்றி நடைபெறுமானால் அநேகமாக, எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஊர்காவற்துறை வங்கி மேற்குறிப்பிட்ட இடத்தில் செயற்பட ஆரம்பிக்கும் என்று அதன் முகவர் திரு. பி. ஏ. அருமைநாயகம் தெரிவித்தார்.

(16, 47)



## படித்த யுவதிகளுக்கு திங்கள் முதல் பயிற்சிநெறி

திருநெல்வேலியில் இயங்கும் மாவட்ட அரசினர் விவசாயப் பயிற்சிப் பண்ணையில் படித்த யுவதிகளுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் 12-ம் திகதி திங்கள் முதல் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்பும் யுவதிகள் அன்று காலை 8 மணிக்கு தமது விண்ணப்பங்களைச் சமர்பித்து பயிற்சி நெறிகளைப் பயிலலாம் என்று பண்ணை முகாமையாளர் திரு ப. தர்மலிங்கம் தெரிவித்தார்.

தையல், மனைவியல், கைப்பணி போன்ற சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கான பயிற்சிகள் இப்பயிற்சித் திட்டத்தில் அடங்குகின்றன.

(33)

# கல்வி நிர்வாக அதிகாரிகளுக்கு புதிய பதவிப் பெயர்கள்

இலங்கைக் கல்வி நிர்வாகச் சேவையில் பதவிப் பெயர்களில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான உயர் கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றுநிருபம் ஒன்று சகல மாவட்டக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச்சுற்று நிருபத்தின்படி இலங்கைக் கல்வி நிர் வாகச் சேவையின் தரம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இனிமேல் கல்விப்பணிப்பாளர்களாக அழைக்கப்படுவார்கள்

கல்வி நிர்வாகச் சேவையின் தரம் இரண்டைச் சேர்ந்தவர்கள் பிரதம கல்வி அதிகாரிகள் எனவும்; தரம் மூன்றைச் சேர்ந்தவர்கள் கல்வி அதிகாரிகள் எனவும் அழைக்கப்படுவார்கள்.

தரம் ஒன்றைச் சேராத அதே வேளை தற்பொழுது மாவட்டக் கல்விப்பணிப்பாளர்களாகப் பணிபுரிபவர்கள் இனிமேல் மேலதிக கல்விப் பணிப்பாளர்கள் என அழைக்கப் படுவர்.

இந்தச் சுற்று நிருபத்திற்கு இணங்க தற்சமயம் வழக்கிலிருக்கும் கோட்டக்கல்வி அதிகாரிகள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள்என்ற பெயர்களை வழங்குவது சட்டப்படி தவறானது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## தாதிகள் விடுதியில் வெடிக்காத ஷெல்

யாழ் தாதிகள் பாடசாலையில் மாணவர்கள் தங்கும் விடுதியில் வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது.

திருத்த வேலையில் ஈடுபட்டிருக்கும் போது பயிலுனர் தாதிகள் அங்கு இதனைக் கண்டுபிடித்தனர். (71)

## சகல அரச ஊழியர்களுக்கும் இம்மாதம் முதல் விசேட படி

சகல அரசாங்க, உள்ளூராட்சிச்சபை ஊழியர்களுக்கும் இம்மாதம் முதல் விசேட அலவன்ஸ்கள் வழங்கப்படவுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது

இதன்படி 2000 ரூபாவிற்கு குறைந்த மாதாந்த சம்பளத்தைப் பெறும் சகல அரச உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் மாதாந்தம் 300 ரூபா அலவன்ஸ் வழங்கப்படும்.

2000ரூபாவிற்கு மேற்பட்ட மாதாந்த சம்பளத்தைப் பெறுவோருக்கு 200 ரூபா மேலதிகப்படி வழங்கப்படும்.

இந்த மேலதிகப்படி ஒய்வூதியம் பெறும் சகல தரப்பினருக்கும் வழங்கப்படும்.

இதே போன்ற மேலதிகப் படியை சகல தனியார் நிறுவனங்கள், மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்களும் தமது ஊழியர்களுக்கு வழங்க வேண்டுமென அரசாங்கம் கேட்டுள்ளது.

பெற்றோலிய பொருட்களின் விலை அதிகரிப்பை ஈடுசெய்யும் வகையிலேயே இந்த விசேட அலவன்ஸ் வழங்கப்படுவதாக நேற்று அரசாங்கம் அறிவித்தது.

## 1988இல் பயிற்சி முடித்த

## எட்டு ஆரம்ப ஆசிரியர்க்கு இரண்டரை வருடத்தால் நியமனம்

1988 பெப்ரவரியில் சேவை முன்பயிற்சி முடித்தும் இது வரை நியமனம் வழங்கப் படாதிருந்த எட்டு ஆரம்ப ஆசிரியர்களுக்கான நியமனங்கள், தமிழர் ஆசிரியர்சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவத்தின் முயற்சியினால் இரண்டரைவருடத்தின் பின் கல்விச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு யாழ் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

அவ்வாறு நியமனம் பெற்றவர்களின் விபரங்கள் பின் வருமாறு:-

செல்வி வீ. யுகசோனப்பிகா (வரணி), செல்வி ஏ. சறோசாதேவி (அரியாலை), செல்வி சீ.கௌரிமலர் (கோப்பாய்), செல்வி எஸ். சுமதி (தம்பசிட்டி), செல்வி ஏ. சந்திரகாந்தி (சுதுமலை), செல்வி எஸ், சீவரஞ்சினி (சுன்னாகம்), திரு. எஸ்.எல். எல், ஸ்ரீதரன் (புன்னாலைக் கட்டுவன்), செல்வி பி. சசிரேகா (கரவெட்டி). (32)

## அரசாங்க அதிபர் 15 இல் திரும்புவார்

யாழ் மாவட்டத்தின் முக்கிய தேவைகள் குறித்து கொழும்பு சென்றுள்ள யாழ் அரசாங்க அதிபர் இம்மாதம் 15 ஆம் திகதி இங்கு திரும்பவுள்ளார்.

அரசாங்க அதிபர் இங்கு வரும்போது வங்கிகளுக்கும், யாழ் செயலகத்தின் தேவைகளுக்குமான பணத்தையும் கொண்டுவருவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (66)

## பேக்கரிகளுக்கும் மா கப்பலில் அனுப்ப ஏற்பாடு

யாழ் மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டுப்பாட்டு விலையில் விற்பதற்கு மா அனுப்பி வைக்க யாழ் அரசாங்க அதிபர் கொழும்பில் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக பிரத்தியேகக் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும் மா பேக்கரிகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

(66)

### பிரதமர்...

போட்டிக்குழுவினர் ஆகியோர் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

ஜனதாதளம், இடதுசாரிகள், சுயேட்சைகள் பிரதமர் வி. பி. சிங்கிற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

நம்பிக்கைப் பிரேரணை தோல்வியடைந்ததையடுத்து திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் ராஜினாமா செய்தார்.

### பதவியைக்...

அங்கு சென்று சிங்களவர்களுக்காக அமைக்கப்படும் 60 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமம் ஒன்றை நிர்மாணிப்பதில் தற்போது ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தனது பதவி நீடிப்புக்காக தமிழரின் பாரம்பரியப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் சிங்கள அரசின் கொள்கைக்கு உடந்தையாகத் தமிழ்மகன் ஒருவன் செயற்படுவது தமிழினத்திற்கே வேதனை தருகின்றது என அப்பகுதி தமிழ்மக்கள் தெரிவிக்கின்றனர். (ப10)

### முல்லையில்...

பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இத்தினத்தையொட்டி கலை, கலாசாரம், நாடகம், கவிதை, கட்டுரைப்போட்டிகள் நடாத்துதல் மற்றும்வீதிகளை அலங்கரித்தல், மரம் நாட்டுதல், தமிழீழத்தின் தேசியக் கொடிஏற்றல்நடைபெறும். 38

### திருத்த...

பிரிவே இதற்குப் பொறுப்பு என்பதால் அப்பிரிவே திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வெகு விரைவில் இத்திருத்த வேலைகள் நடைபெறுமெனவும் அவை முடிந்தவுடன் உடனடியாக மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்வதாகவும் இலங்கை மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (74)

## முதலாம்தர அதிபர் நியமனம்

## 30 அதிபர் விபரங்களே யாழ் வந்துள்ளன

யாழ் மாவட்டத்தில் முதலாம்தர அதிபர் பதவி உயர்வுகளைப் பெற்றவர்களுக்கான நியமனங்கள் சம்பந்தப்பட்ட அதிபர்களுக்கு கல்விச்சேவை ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களின் நியமனக்கடிதங்களின் பிரதிகள் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாயினும் இதுவரை முப்பது அதிபர்களது விபரங்கள் மட்டுமே யாழ் கல்வித்திணைக்களத்துக்கு கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களின் விபரங்கள் விரைவில் கல்வித்திணைக்களத்துக்குக் கிடைக்குமெனத் தமிழராசிரியர் சங்கப்பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

1. 6. 1989 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் படியாக வழங்கப்பட்டுள்ள இப் பதவி உயர்வுகளைப் பெற்ற அதிபர்களுக்குரிய குறித்து ஒதுக்கப்பட்ட பாடசாலைகளுக்கான நியமனங்கள் யாழ் கல்வித்திணைக்களத்தால் மிகவிரைவில் வழங்கப்படவுள்ளன. (32)

### கிழக்கு...

அரசாங்க அதிபர் திருகோணமலை, மட்டக்களப்பு அரசாங்க அதிபர்களுடன் கொழும்பிலிருந்து தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்துவருகிறார். (66)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 08-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.